( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-12


# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................................


நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01) ஒரு நாளில் சூரியன் பயணம் செய்த ஐந்து சந்தர்ப்பங்களைக் கீழேயுள்ள உருக்கள் காட்டுகின்றன. அதன்படி, அந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்காக எழுதியுள்ள விடையைத் தெரிவு செய்க.




(1) E , B , C , D , A (2) D , B , E , A , C (3) C , B , E , A , D


(02)



அருகில் தரப்பட்ட செவ்வக வடிவக் கார்ட்போர்ட் அட்டையில் இருந்து நிழற்றப்பட்டுள்ள முறையிலான முக்கோண வடிவங்கள் எத்தனை வெட்ட முடியும்?

(1) 12 (2) 18 (3) 16

(03) சியானா கடையொன்றில் கொள்வனவு செய்த குறித்த புத்தகம் ஒன்றில் 19, 20, 30, 31, 37, 38, 43, 44 ஆகிய பக்கங்கள் அச்சிடப்படாததால் அவற்றை அகற்ற வேண்டி ஏற்பட்டது. எனவே புத்தகத்திலிருந்து அகற்ற வேண்டிய தாள்களில் எண்ணிக்கையாக இருக்கக்கூடியது,

(1) 4 (2) 5 (3) 8

(04)



நான்கு பிள்ளைகள் வரிசையாக நின்றுகொண்டிருக்கும் முறை இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. நஸீர் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்கு பாலாவும், பாலா நின்றுகொண்டிருக்கும் இடத்திற்கு நஸீரும் வந்தார்கள். அதன்பின் மதீன் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்கு நாதனும், நாதன் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்கு மதீனும் வந்தார்கள். அதன்படி, தற்போது பாலாவின் இடதுக் கைப்பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் பிள்ளை,

(1) நாதன் (2) நஸீர் (3) மதீன்

(05) சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றின் முடிவிடத்தை நெருங்கும்போது வாசு 4 ஆவதாக வந்தான். வாசுக்குப் பின்னால் போட்டியை நிறைவு செய்த போட்டியாளர்களின் எண்ணிக்கை, வாசுக்கு முன்னால் போட்டியை நிறைவு செய்த போட்டியாளர்களின் எண்ணிக்கையை விட இரண்டு அதிகமாகும். அதன்படி, சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய மொத்த போட்டியாளர்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 8 (3) 6


(06) வீதியில் வரிசையாக நடப்பட்டுள்ள இரு தூண்களுக்கு இடையே 3 கொடிகள் நடப்பட்டுள்ளன. அவ்வாறான 12 தூண்களுக்கிடையே நடப்பட்டிருக்கும் கொடிகளின் எண்ணிக்கை,


(1) 36 (2) 33 (3) 30


(07) திவ்யாவின் வயது 7 ஆக இருக்கும்போது அவளது அப்பாவின் வயது 26 ஆகும். திவ்யாவின் வயது இரு மடங்காகும்போது அவளது அப்பாவின் வயது,

(1) 52 (2) 40 (3) 33


(08) பெட்டியொன்றில் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களில் பந்துகள் உள்ளன. இங்குள்ள மஞ்சள் நிறப் பந்துகளின் எண்ணிக்கை, சிவப்பு நிறப் பந்துகளின் எண்ணிக்கையை விட அதிகமாகும். பெட்டியிலுள்ள நீல நிறப் பந்துகளின் எண்ணிக்கை, சிவப்பு நிறப் பந்துகளின் எண்ணிக்கையினதும் மஞ்சள் நிறப் பந்துகளின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகைக்குச் சமனாகும். அதன்படி, இத்தகவல்களைக் காட்டும் வரைபடம்,

(1)




(2)



(3)



kalvi.lk

(09)  ஒரேயளவான ஐந்து சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் இத்திண்மம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இங்கு காணக்கிடைக்கும் கனவுருக்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 7 (3) 6

(10)  இந்தக் கேக்கை 16 சம துண்டுகளாக வெட்டுவதற்கு கத்தி ஒன்றினால் வெட்ட வேண்டிய குறைந்தபட்ச தடவைகளின் எண்ணிக்கை,




(1) 8 (2) 6 (3) 12



(11) கீழே காணப்படும் வினாவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

**வயலினுக்குச் சங்கீதம்போல பந்துக்கு ..........................**


(1) மைதானம் (2) கிரிக்கெட் (3) விளையாட்டு

(12) சிவகுமார் வீட்டிலிருந்து மேற்குத் திசை நோக்கி 30m சென்று, அதன்பின் தனது இடதுக் கைப்பக்கத்திற்குத் திரும்பி 15m சென்று, அதன்பின் தனது வலதுக் கைப்பக்கத்திற்குத் திரும்பி 30m தூரம் சென்றான். அதன்படி, அவன் பயணித்த பயணப் பாதையை தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(13)  இவ்வுருவில் காணக்கூடிய  இத்தகைய உருக்களின் எண்ணிக்கை

(1) 4 (2) 6 (3) 5

(14)  வட்ட வடிவக் கம்பிச் சட்டகங்களினால் அமைத்த பந்து இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது. இப்பந்தை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட வட்ட வடிவக் கம்பிச் சட்டகங்களின் எண்ணிக்கை,

(1) 11 (2) 9 (3) 10

(15) ஒரு வாங்கியில் ஐந்து பேர் அமர்ந்திருந்தனர். குமார் வசீமுக்கும் ரவிக்கும் நடுவில் அமர்ந்திருந்தான். சுரேஷ் நஸீருக்கும் வசீமுக்கும் நடுவில் அமர்ந்திருந்தான். அதன்படி, வாங்கியின் சரிநடுவில் அமர்ந்திருந்தவர்,

(1) வசீம் (2) சுரேஷ் (3) குமார்

*** ஒரு பாடசாலையில் 5A, 5B, 5C எனும் மூன்று வகுப்புகளிலுள்ள எல்லா மாணவர்களும் 2022 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அதற்கான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் (16), (17) ஆகிய வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்க.**


| தரம் | சித்தியடைந்தோர் | | சித்தியடையாதோர் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 5A | 10 | 9 | 3 | 4 |
| 5B | 11 | 12 | 6 | 2 |
| 5C | 8 | 13 | 4 | 1 |

(16) மிகக் கூடிய மாணவர்கள் சித்தியடைந்த வகுப்பு,


(1) 5A (2) 5B (3) 5C

(17) அப்பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 13 (2) 17 (3) 20




(18)  ஒரேயளவான பல சிறிய சதுரமுகிகளைப் பயன்படுத்தி ஒரு சிறுபிள்ளை செய்த ஆக்கம் ஒன்று இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. அதனை ஒரு பக்கமாக பார்க்கும்போது காணக்கிடைக்கும் முறை இங்கு காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வாக்கத்தை அமைப்பதற்கு தேவைப்பட்ட குறைந்தபட்ச சதுரமுகிகளின் எண்ணிக்கையாக இருக்கக்கூடியது,

(1) 12 (2) 13 (3) 11

(19)  கம்பிகளினால் அமைக்கப்பட்ட கனவுரு ஒன்று இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ளது. இக்கனவுருவில் காணக்கிடைக்கும் நிழற்றப்பட்ட அளவிலான சிறிய சதுர வடிவங்களின் மொத்த எண்ணிக்கை,


(1) 28 (2) 32 (3) 36

(20) பின்வரும் மூன்று உருக்களுள் பொருத்தமற்ற உரு,

(1)  (2)  (3) 


kalvi.lk

சுட்டெண்:-..............................................

(21) 

முக்கோண வடிவ கம்பிச் சட்டகம் இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. இக்கம்பிச் சட்டகத்தை A எனும் இடத்தில் வெட்டி விரித்து சதுர வடிவ கம்பிச் சட்டகம் ஒன்றை அமைத்தால், அச்சதுரத்தின் ஒருபக்க நீளம்,




(1) 5cm (2) 4cm (3) 7cm


(22) 

இவ்வுருவிற்கேற்ப, மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.



(1) மஞ்சள் நிறத்தை விரும்பும் அனைவரும் பச்சை நிறத்தையும் விரும்புகின்றனர்.
(2) பச்சை நிறத்தை விரும்பும் அனைவரும் மஞ்சள் நிறத்தையும் விரும்புகின்றனர்.
(3) மஞ்சள் நிறத்தை மாத்திரம் விரும்புவர்கள் இல்லை.

(23) ஒரே சம நீளமுள்ள ஈர்க்குத் துண்டுகளை மாத்திரம் பயன்படுத்தி அமைக்க முடியாத உரு,

(1)  (2)  (3) 

(24) 

உரு 1 இலிருந்து உரு 2 இலுள்ள பகுதிகளை நீக்கிய பின் கிடைக்கும் உரு,

(1)  (2)  (3) 

(25) அனிலிடமும் கமலிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகை ரூபாய் 120.00 ஆகும். அனிலிடமுள்ள பணத்தைப்போல் மூன்று மடங்கு பணம் கமலிடம் உள்ளது. அதன்படி, கமலிடம் உள்ள பணம்,



(1) ரூபாய் 75.00 (2) ரூபாய் 90.00 (3) ரூபாய் 60.00

(26) கீழே வினாவில் முதல் கூட்டினுள் தரப்பட்டுள்ள இரு எண்களுக்குப் பதிலாகப் பிரதியீடு செய்யக்கூடிய எண்களைக் கொண்ட கூட்டைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

[XIX - VI] - V = II + VI


(1) [XX - IV] (2) [VII + IX] (3) [VIII + V]

(27) பின்வரும் ஒவ்வொரு வாகனத்தினதும் சக்கரங்கள் சுழலும் திசைகளை அம்புக்குறிகளினால் காட்டப்பட்டுள்ளன. சக்கரங்கள் சுழலும் திசைகளுக்கேற்ப முன்னோக்கிப் பயணம் செய்யும் வாகனத்தை தெரிவு செய்க.

(1)  (2)  (3) 


(28) கடிகார முகத்தில் மணி முள் அரை சுற்று சுழலும்போது அதன் நிமிட முள் சுழலும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 1 தடவை (2) 6 தடவைகள் (3) 12 தடவைகள்

(29) 

A, B, C ஆகிய மூன்று பாத்திரங்களிலும் உருவில் காட்டியுள்ள முறைப்படி நீர் நிரப்பப்படுகின்றது. மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் அளவு ஒன்றுக்கொன்று சமனாவதற்கு A பாத்திரத்திலிருந்து B, C பாத்திரங்களுக்கு ஊற்ற வேண்டிய நீரின் மொத்த அளவு,

(1) 4 லீற்றர் (2) 5 லீற்றர் (3) 6 லீற்றர்


(30) 

இக்கூட்டினுள் காணப்படும் பிராணிகளை மூன்று வகைகளாக வேறுபடுத்தலாம். இம்மூன்று வகை பிராணிகளையும் கொண்ட விடையைத் தெரிவு செய்க. ( ஒவ்வொரு வகையிலும் மூன்று பிராணிகள் வீதம் இருக்க வேண்டும் )

(1) உணவுகளை அசுத்தப்படுத்தும் பிராணிகள் - தாவரவுண்ணிகள் - நீர் வாழ் உயிரினங்கள்
(2) ஊன் உண்ணிகள் - நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணிகள் - பூச்சிகள்
(3) முட்டைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் பிராணிகள் - காடுகளில் வாழும் பிராணிகள் - எமக்கு நோயை பரப்பும் பிராணிகள்.

kalvi.lk

(31)




Q இற்கு வடக்குத் திசையில் P அமைந்துள்ளது. அதன்படி, R இற்கு எத்திசையில் S அமைந்துள்ளது?


(1) தெற்குத் திசையில் (2) தென்மேற்குத் திசையில் (3) தென்கிழக்குத் திசையில்

(32) "பிள்ளைகள் எழுத்துக்களை எழுதுவதற்கு வலதுக் கையைப் பயன்படுத்துவர்" இக்கூற்று,

(1) எப்போதும் உண்மையானது. (2) பெரும்பாலும் உண்மையானது.

(3) சில சந்தர்ப்பங்களில் உண்மையானது.


(33)




இக்கடிகார முகம் காட்டும் நேரத்திற்குப் 10 நிமிடங்களுக்கு முன் எங்கள் அப்பா வீட்டிற்கு வந்தார். அப்பா வீட்டிற்கு வந்து 25 நிமிடங்களின் பின் அம்மா வீட்டிற்கு வந்தார். அதன்படி, அம்மா வீட்டிற்கு வந்த நேரம்,

(1) 9.35 (2) 9.45 (3) 9.40

(34)




இவ்வுரு வட்ட வடிவ கார்ட்போர்ட் அட்டையின் $\frac{3}{4}$ பங்கைக் காட்டுகிறது. எறும்பொன்று A யிலிருந்து B மற்றும் C ஊடாக D வரை பயணித்தால், எறும்பு பயணித்த மொத்தத் தூரம்,

(1) 24cm (2) 22cm (3) 27cm

(35) ரஞ்சித் தென்கிழக்குத் திசையைப் பார்த்து நின்றுகொண்டிருந்தான். அதன்பின் அவன் தனது இடதுக் கைப்பக்கத்திற்குச் செங்கோணமாக திரும்பி நின்றுகொண்டிருந்தான். அதன்படி, அவன் தற்போது பார்த்து நின்றுகொண்டிருக்கும் திசை,

(1) தென்மேற்குத் திசை (2) வடகிழக்குத் திசை (3) வடமேற்குத் திசை

(36) ஒரு வியாபாரியிடம் 1kg, 500g, 200g, 100g ஆகிய படிக்கற்கள் ஒன்று வீதம் மாத்திரம் உள்ளன. இவற்றை மாத்திரம் பயன்படுத்தி 800g அரிசியை ஒரே தடவையில் நிறுப்பதற்குப் பயன்படுத்திய படிக்கற்கள்,

(1) 1kg, 200g (2) 500g, 100g (3) 500g, 200g

(37) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே
செத்தால் ஒன்று அவைகளிலே
சேர்த்து யாவும் அழுதிடுமே

இப்பாடலில் வர்ணிக்கப்படும் பிராணி,

(1) சேவல் (2) பசு (3) காகம்

(38) சம வயதுடைய நான்கு பிள்ளைகளின் வயதுகளின் கூட்டுத்தொகை 3 வருடங்களுக்கு முன்னர் 40 ஆகும். அதன்படி, ஒரு பிள்ளையின் தற்போதைய வயது,

(1) 10 (2) 13 (3) 12

(39) ஒரு குறிப்பிட்ட வினாத்தாளில் 20 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கான சரியான விடைக்கு 2 புள்ளிகள் வீதமும் 11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கான சரியான விடைக்கு 3 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும். பிள்ளையொன்று 3, 7, 9, 12, 15, 17, 20 ஆகிய ஏழு வினாக்களுக்கு பிழையாக விடைகளை எழுதியிருந்தது. அதன்படி, அப்பிள்ளை பெற்ற மொத்தப் புள்ளிகள்,

(1) 28 (2) 36 (3) 32

(40) எனக்கு நான்கு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரிகளும் உள்ளனர். எங்கள் குடும்பத்தில் பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை ஒன்று அதிகம் ஆகும். அதன்படி, நான்,

(1) ஆண் பிள்ளை (2) பெண் பிள்ளை (3) கூறமுடியாது.

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-12

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியிலேயே தங்கியுள்ளது. அத்தகைய பெருமை ஈட்டிக் கொடுப்பதற்கு காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப்போல் போற்றுவது எமது கடமையாகும். எமது பொதுச் சொத்துக்களான சந்தைகள், நூல்நிலையங்கள், பூங்காக்கள் என்பவற்றையும் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

(i) பந்தியில் வந்துள்ள சினைப் பெயர்ச்சொல் யாது? ..........................................................

(ii) "நாட்டின்" என்பதன் பன்மை வடிவினை எழுதுக. ..........................................................

(iii) மன அமைதிபெற நாடிச் செல்லக்கூடிய இடம் யாது? ..........................................................

(iv) "நூல்" எனும் சொல்லிலுள்ள உயிர்க்குறி யாது? ..........................................................

(v) பந்தியில் வந்துள்ள உயர்திணை தன்மை பன்மை பெயர்ச்சொல் யாது? ..........................................................

**(02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) புத்தகங்களைக் ...................... ( கிளிக்காது / கிழிக்காது / கிலிக்காது ) பாதுகாத்தல் வேண்டும்.

(ii) நாங்கள் யானைகள் ...................... ( சரனாலயத்திற்குச் / சறணாலயத்திற்குச் / சரணாலயத்திற்குச் ) சென்றோம்.

(iii) ................. ( எண்ணெய் / எந்ணெய் / எண்ணை ) அதிகம் அடங்கியுள்ள உணவுகளை அடிக்கடி உட்கொள்வது நல்லதல்ல.

**(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( X ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) "பறந்தன" என்பது அஃறிணை, பன்மை, இறந்தகால வினைச்சொல்லாகும். (   )

(ii) "வந்தீர்கள்" என்பது உயர்திணை, முன்னிலை, எதிர்கால, பன்மை வினைச்சொல்லாகும். (   )

(iii) "சிறுவர்கள்" என்பது உயர்திணைப் பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல்லாகும். (   )

**(04) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

மகன் தந்தையிடம் நான் மைதானத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறினான்

**(05) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( கொடுத்த வாக்கை மீறல், அறிவு உண்டாதல், நிறையச் சம்பாதித்தல் )

(i) அள்ளிக் குவித்தல் :- ..........................................................

(ii) நாக்குப் புரளுதல் :- ..........................................................

(iii) கண் திறத்தல் :- ..........................................................

**(06) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

(i) வெண்மை + நிலா :- ........................................ (ii) பகல் + உணவு :- ........................................

**(07) கீழே தரப்பட்டுள்ள தொடரைப் பூரணப்படுத்துக.**

முந்திரி குலை என்பதுபோல நெல் ..........................................................

**(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச் சொல்லை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) பகையரசருக்குக் கொடுக்கப்படும் திறைப் பொருள் :- ..........................................................

(ii) ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து :- ..........................................................

**(09) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.**

(i) இ. ம. வ :- ........................................ (ii) இ. ரூ. கூ :- ........................................

**(10) ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.**

(i) Bread :- ........................................ (ii) Library :- ........................................

kalvi.lk

**(11) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.**

(i) forest / big / The / trees / has :- ....................................................................................................

(ii) I / a / in / cage / live :- ....................................................................................................

**(12) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

(i) I have .................... ( one / two ) sisters. (ii) Do you .................... ( have / has ) a pet.

**(13) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) நங்கி (නංගි) :- ...................................................... (ii) கபு(ட்)டா (කපුටා) :- ......................................................


**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

எத்தனை மாம்பழம் வேண்டும் ? :- ....................................................................................................

**(15) பின்வரும் நான்கு எண்களையும் ஏறுவரிசையில் மீண்டும் எழுதுக.**

32046 , 30099 , 32675 , 31900 :- ....................................................................................................

(16) ஒன்றினிடத்திலும் நூறினிடத்திலும் 4 யும், பத்தினிடத்திலும் ஆயிரத்தினிடத்திலும் 7 யும் பயன்படுத்தி நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண்ணை எழுதுக. ....................................................................

(17) 

இவ்வுருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றுக.


(18) 1kg பப்பாசிப்பழத்தின் விலை ரூபாய் 80.00 ஆகும். 1kg 250g நிறையுள்ள பப்பாசிப்பழத்திற்கு எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்? ....................................................................

(19) நோயாளியொருவருக்கு தினமும் காலையில் 4 விசுக்கோத்துகள் வீதமும் மாலையில் 4 விசுக்கோத்துகள் வீதமும் உணவாக வழங்கப்படுகின்றன. இதற்காக 88 விசுக்கோத்துகள் அடங்கிய பைக்கற்று எத்தனை நாட்களுக்குப் போதும்? ....................................................................


(20) 

| 22 : 40 |
|---|

A

B 


கடிகாரம் A இன் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் B இன் முகத்தின் மீது காட்டும் வகையில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைந்துக் காட்டுக.

(21) 

(i) இவ்விரு திண்மங்களிலும் உள்ள உச்சிகளின் கூட்டுத்தொகையை உரோம எண்குறிகளில் எழுதுக. ....................................................

(ii) இவ்விரு திண்மங்களிலும் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகையை உரோம எண்குறிகளில் எழுதுக. ....................................................

(22) பின்வரும் எண் கோலத்திற்கேற்ப அடுத்துவரும் எண்ணை எழுதுக.

0.2 , 0.4 , 0.6 , 0.8 , ☐

(23) வாகனமொன்று சென்ற தூரம் மானியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

| 0 | 9 | 9 | 8 | 9 | km |
|---|---|---|---|---|---|

அவ்வாகனம் மேலும் 11km சென்ற பின்னர் மானியில் காணப்படும் இலக்கங்களை வெற்றுக்கூடுகளில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | km |

(24) 6, 2, 4, 7, 9 என்னும் எண்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஒரு வினாவிற்கு ஓர் எண்ணை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.)

(i) 9 + .............. + .............. = 22 (ii) .............. + .............. + .............. = 19


(25) 2 லீற்றர் குளிர்ப்பானத்தை ஒவ்வொன்றும் 580 மில்லிலீற்றர் அளவான 3 குவளைகளில் ஊற்றும்போது எஞ்சியிருக்கும் குளிர்ப்பானத்தின் அளவு யாது? ....................................................................

(26) 4 மீற்றர் நீளம் கொண்ட துணியொன்றை 120 சென்ரிமீற்றர் மற்றும் $\frac{1}{2}$ மீற்றர் அளவிலான இரு துணித் துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டால் எஞ்சும் துணித் துண்டின் நீளம் யாது? ....................................................................

Education கல்வி அதியாபன
kalvi.lk


சுட்டெண்:-..............................................

(27)




இவ்வுருவில் வெளியிலுள்ள செங்கோணங்களை விட உள்ளே அதிகமாக இருக்கும் செங்கோணங்களின் எண்ணிக்கை எத்தனை? ..........................................................................

(28)




பிள்ளையொன்று A யிலிருந்து B வரை மேற்குத் திசை நோக்கிச் சென்று அங்கிருந்து C வழியே D ஐ அடைந்தது. அதன்படி, அப்பிள்ளை மீண்டும் அப்பாதை வழியே D யிலிருந்து A வரை பயணிக்கும் திசைகளை ஒழுங்குமுறையில் எழுதுக. ..........................................................................

(29)




பெட்டியொன்றில் ஒவ்வொரு நிறத்திலும் உள்ள பூக்களின் எண்ணிக்கையை இவ்வட்ட வரைபு காட்டுகின்றது. பெட்டியிலுள்ள மஞ்சள் நிறப் பூக்களின் எண்ணிக்கை 6 ஆகும். அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

**(i)** இப்பெட்டியிலுள்ள ஊதா நிறப் பூக்களின் எண்ணிக்கை யாது? ..............................

**(ii)** இப்பெட்டியில் வெள்ளை நிறப் பூக்களை விட எத்தனை சிவப்பு நிறப் பூக்கள் அதிகமாக உள்ளன? ..............................

**(iii)** இப்பெட்டியிலுள்ள மொத்த பூக்களின் எண்ணிக்கை யாது? ..............................................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) வைரமான தாவரங்கள் அல்லாதது,
(1) கருங்காலி, தேக்கு (2) முதிரை, மகோகனி (3) இறப்பர், மூங்கில்

(31) சந்திரன் பூமியைச் சுற்றி ஒரு தடவை சுழல்வதற்கு எடுக்கும் காலம்,
(1) 28 நாட்கள் (2) ஒரு மாதம் (3) ஒரு நாள்

(32) நுளம்பு, மின்மினிப்பூச்சி, வௌவால், ஆந்தை ஆகிய பிராணிகள்,
(1) மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணிகளாகும். (2) இரவு வேளையில் நடமாடும் பிராணிகளாகும்.
(3) சமூகமாக வாழும் பிராணிகளாகும்.

(33) வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரங்கள்,
(1) அச்சி, எண்ணை (2) துத்திரி, நாயுருவி (3) கடுகு, குன்றிமணி

Education கல்வி අධ්‍යාපන

(34) காற்றின் மூலம் தொழிற்படும் சங்கீத உபகரணங்கள்,
(1) நாதஸ்வரம், கொம்பு (2) வீணை, சித்தார் (3) தம்பட்டம், தபேலா

(35) எமது நாட்டை ஆட்சிசெய்த வெளிநாட்டவர்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் (2) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
(3) ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர்

(36) பின்வருவனவற்றில் தேசிய அடையாளங்கள் அல்லாதது,
(1) நீலோற்பலம், நாக மரம் (2) வொலிபோல், காட்டுக்கோழி (3) நிறைகுடம், நெற்கதிர்கள்

(37) மரக் குற்றியில் உருவத்தைச் செதுக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்,
(1) உளி (2) சீவுளி (3) சவள்

(38) நான்கு இதழ்களைக் கொண்ட பூ அல்லாதது,
(1) வெட்சி (2) நாக மலர் (3) பவளமல்லிகை

(39) மணமுள்ள பூக்களாவன,
(1) அந்தூரியம், செவ்வரத்தை (2) ரோஜா, பவளமல்லிகை (3) போகன்விலா, கார்த்திகை

(40) கிளைகளிலும் தண்டுகளிலும் காய்கள் உண்டாகும் தாவரம்,
(1) வெரலு (2) பலா (3) மாதுளை


(41) இலங்கையில் அதிகமாக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்,
(1) கிழக்கு மாகாணம் (2) மேல் மாகாணம் (3) வட மாகாணம்

(42) பண்டைய காலத்தில் தேனில் அமிழ்த்தி வைத்தல் மூலம் நீண்ட காலம் பழுதடையாமல் பாதுகாத்து வைக்கப்பட்ட உணவு வகை,
(1) இறைச்சி (2) மீன் (3) கருவாடு

(43) துறைமுகங்கள் அமைந்துள்ள இடங்கள் அல்லாதது,
(1) கொழும்பு, காலி (2) பலாலி, இரத்மலானை (3) திருகோணமலை, அம்பாந்தோட்டை

(44) ஆபிரிக்க நாடுகள் அமைந்துள்ளது,
(1) இலங்கைக்கு மேற்குத் திசையில் (2) இலங்கைக்கு வடக்குத் திசையில் (3) இலங்கைக்கு கிழக்குத் திசையில்


kalvi.lk

(45) 



இரண்டு கண்ணாடிக் குவளைகளில் இரு புதிய முட்டைகள் இடப்பட்டுள்ள முறையை A, B ஆகிய உருக்களினால் காட்டப்பட்டுள்ளன. A எனும் கண்ணாடிக் குவளையிலுள்ள முட்டை மிதந்தும், B எனும் கண்ணாடிக் குவளையிலுள்ள முட்டை அமிழ்ந்தும் காணப்படுகின்றன. அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) A எனும் கண்ணாடிக் குவளையிலுள்ள நீர் சுத்தமான நீராகும்.
B எனும் கண்ணாடிக் குவளையிலுள்ள நீர் உப்பு நீராகும்.
(2) A எனும் கண்ணாடிக் குவளையிலுள்ள நீர் உப்பு நீராகும்.
B எனும் கண்ணாடிக் குவளையிலுள்ள நீர் சுத்தமான நீராகும்.
(3) A, B ஆகிய இரு கண்ணாடிக் குவளைகளிலுள்ள நீர் உப்பு நீராகும்.

(46) வாய் சார்ந்த நோய்கள், காயங்கள் ஆறுவது தாமதமாதல் ஆகிய நோய்கள் ஏற்படுவது,
(1) விற்றமின் A குறைபாட்டால் (2) விற்றமின் B குறைபாட்டால் (3) விற்றமின் C குறைபாட்டால்

(47) 


பிள்ளையொன்று உருவில் காட்டப்பட்டுள்ள முறைக்கேற்ப ரெஜிபோம் துண்டின் மீதுள்ள சிறிய சட்டக்காந்தம் ஒன்றை நீருள்ள பாத்திரமொன்றில் வைத்தது. அதன்படி, அப்பிள்ளை இப்பரிசோதனையைச் செய்தது,
(1) திசையைக் கண்டறிவதற்கு (2) சட்டக்காந்தத்தை கவரும் பொருட்களைக் கண்டறிவதற்கு
(3) சட்டக்காந்தத்தில் கவரும் தன்மை அதிகமாகவுள்ள இடங்களைக் கண்டறிவதற்கு

(48) 

தேசப்படமொன்றில் இக்குறியீடு காட்டப்பட்டுள்ளது. தேசப்படங்களில் இக்குறியீடு பயன்படுத்தப்படுவது,
(1) பெருந்தெருவை காட்டுவதற்கு (2) அதிவேகப் பாதையை காட்டுவதற்கு (3) புகையிரதப் பாதையை காட்டுவதற்கு

(49) 
இவ்வுரு நம் நாட்டிற்குப் பெரும் சேவையாற்றிய ஒரு தேசிய வீரரைக் காட்டுகிறது. அவரது பெயர்,
(1) அனகாரிக தர்மபால (2) கேர்னல் ஓல்கொட் (3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

(50) பெரிதும் பழைமை வாய்ந்த வரலாற்று முக்கியத்துவமுள்ள தாவரம் மற்றும் அந்த ஒவ்வொரு தாவரமும் அமைந்துள்ள இடமும் கீழே காட்டப்பட்டுள்ளது. அதன்படி, பிழையான தொடர்பைக் காட்டும் விடை,
(1) பெருக்க மரம் (Baobab Tree) - ரிட்டிகல (2) புளிய மரம் - கபலித்தாவை (3) பெருங்கொடி - ஓப்பநாயக்க

(51) இலங்கையில் மாணிக்கக்கல் அகழும் சுரங்கங்கள் அதிகமாக காணப்படுவது,
(1) புத்தளம் (2) இரத்தினபுரி (3) திருகோணமலை

(52) மல்வத்து ஓயா கடலுடன் சங்கமிக்கும் இடம்,
(1) திருகோணமலை (2) மட்டக்களப்பு (3) மன்னார்

(53) பின்வருவனவற்றுள் கடும் பச்சை நிறமான இலைகளைக் கொண்ட தாவரங்கள் அல்லாதது,
(1) ஈரப்பலா, மிளகு (2) பிலிங், அகத்தி (3) வெற்றிலை, பலா

(54) 24 மணித்தியாலங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள்,
(1) தபாற் காரியாலயம், கிராம சேவகர் காரியாலயம் (2) பிரதேச செயலகம், வங்கி
(3) பொலிஸ் நிலையம், அரச வைத்தியசாலை

(55) மட்டையைப் பாவித்து விளையாடும் விளையாட்டுக்கள் அல்லாதது,
(1) ஹொக்கி, பூப்பந்து (2) றகர், வலைப்பந்து (3) எல்லே, கிரிக்கெட்

(56) ஒலிம்பிக் கொடியிலுள்ள ஐந்து வட்டங்களும் குறிப்பது,
(1) ஐந்து கண்டங்களை (2) ஐந்து பிரதான போட்டிகளை (3) ஐந்து பிரதான நாடுகளை

(57) கூட்டமாக வாழும் பறவைகள்,
(1) செண்பகம், பருந்து (2) புறா, காகம் (3) குயில், மீன்கொத்தி

(58) இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள, இலங்கைக்கே உரித்துடைய தீவுகள்,
(1) புங்குடுதீவு, நயினாதீவு (2) மன்னார், மாலைதீவு (3) நேபாளம், இந்தியா

(59) திரு. ஆனந்த சமரக்கோன் அவர்கள்,
(1) அரச இலச்சினையை வடிவமைத்தவர். (2) தேசியக் கொடியை வடிவமைத்தவர் (3) தேசிய கீதத்தை இயற்றியவர்

**(60) "டெங்கு நோயை எமது நாட்டிலிருந்து விரட்டியடிப்போம்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

kalvi.lk

(3) ..................................................................................................................